## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2013

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 அதிகாரசபையின் தொடர்ந்து இயங்கும் தன்மை**

அதிகாரசபையின் சொத்துக்கள் மீளாய்வாண்டிலும் கடந்த 03 வருடங்களிலும் முறையே ரூபா 24,750,830 , ரூபா 15,788,833 , ரூபா 31,794,284 மற்றும் ரூபா 12,841,863 தொகைகளாக மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 10 மில்லியன் திறைசேரி நிதிஏற்பாடு கிடைத்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய சொத்துக்கள் 56.8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குமிடையே விகிதாசாரம் முறையே 1:1.4, 1:1.5, 1:2.1 மற்றும் 1:1.9 எனக் காணப்படுகின்றமையினால் திறைசேரியின் நிதியுதவி கிடைத்திருந்த போதிலும் அதிகாரசபையின் தொடர்ந்து இயங்கும் நிலை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

**2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) நிதிக்கூற்றுக்களின் முற்பகுதியில் காண்பிக்கப்படுகின்ற சகல தலைப்புக்களுக்குமுரிய போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் ரூபா 23,658,765 தொகையான ஒதுக்கங்கள் மற்றும் ரூபா 2,262,663 தொகையான மூலதன மாற்றல்கள் தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களுடன் பகிரங்கப்படுத்தப்படுன்ற தகவல்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய பின்வருபவைகள் அதிகாரசபையினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- அதிகாரசபை அமைந்துள்ள இடம், சட்டரீதியான தன்மை மற்றும் அது அமுல்படுத்தப்படுகின்ற வலயம்
- அதிகாரசபையின் செயற்பாடுகளின் தன்மை மற்றும் அதன் பிரதான செயற்பாடுகளின் விபரங்கள்

- அதிகாரசபையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய அரசியலமைப்புத் தொடர்புகள்

(iii) நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றில் ஒப்பீட்டுத் தொகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 - காசுப்பாய்ச்சல் கூற்று**

மூன்று மாதங்களுக்குக் குறைந்த குறுகிய கால முதலீடுகள் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு, காசுக்குச் சமமானவைகளாகக் கருதப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 40,000,000 பெறுமதியான ஏழு நாள் வைப்புக்கள் மற்றும் ரூபா 1,016,437 தொகையான சேமிப்பு வைப்புக்கள் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாகக் கருதப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பூச்சியப் பெறுமதியுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களுக்காக ரூபா 2,919,600 பெறுமானத் தேய்வு ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக தேவையான நிதியம் அதற்காகக் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து நிதியீட்டம் செய்யப்படுவதாக நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அம் முதலீடுகளின் பெறுமதி ரூபா 2,433,161 ஆகக் காணப்பட்டது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் கணக்கு வைக்கப்படாத பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 476,458 தொகை மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மற்றும் ஆண்டின் நட்டம் என்பன அப் பெறுமானத்தினால் முறையே குறைவாகவும் மிகையாகவும் கணிப்பிடப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டின் இலாபத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 920,610 தொகையான வருமான வரி மீளாய்வாண்டின் நிதிச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் ஏனைய நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 499,987 தொகை வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் பெயரிலுள்ள செலுத்த வேண்டிய கணக்கில் பிழையாக வரவு வைக்கப்பட்டமையினால் கணக்கின் மீதி ரூபா 499,987 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்க வேண்டிய ரூபா 22,181,496 தொகையான பணிக்கொடைக்கான நிதிஏற்பாடு நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் முறையே அப்பெறுமானத்தினால் மிகையாகவும் குறைவாகவும் கணிக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஐயக்கடன் ஒதுக்கீடான ரூபா 3,848,646 தொகை அத்திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியில்

கழிக்கப்படாமல் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் மூலம் விளக்கமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 4,760,315 தொகையான கடன்பட்டோருக்காக ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 318,779 தொகையான காப்புறுதி நட்டஈடு அதற்குரிய செலவினங்களிலிருந்து கழிக்கப்படாமல் நானாவித வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நிதிச் செலவினமல்லாத ரூபா 1,010,344 தொகையான ஏனைய செலவினம் நிதிச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஓ) சம்பளத்திற்காக செலவிடப்பட்ட திறைசேரி நிதி ஏற்பாடுகளுக்காகவும் குத்தகைகளுக்காகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செய்யப்பட்ட சீராக்கங்களின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோற்றம் பெற்ற காசுப் பாய்ச்சல் மற்றும் முதலீட்டுச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோற்றம் பெற்ற காசுப்பாய்ச்சல் முறையே ரூபா 7,203,571 இனால் குறைவாகவும் மிகையாகவும் கணிக்கப்பட்டிருந்தன.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட 06 கடன்பட்டோர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,046,611 கூட்டுத்தொகையான கடன் தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபை ஆக்கபூர்மான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 24,686,666 தொகையான பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கணக்கின் மீதியான ரூபா 3,194,996 தொகையை ஆண்டின் இறுதிவரையிலும் செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் | |
| (i) 5 ஆம் பந்தியின் (உ) பிரிவு | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் செயற்பாடும் நிருவாகமும் அதிகாரசபையினால் செய்ய வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் |

| | | |
|---|---|---|
| | | மீளாய்வாண்டு வரை கூட்டு ஆதன சான்றிதழ் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகிக்கப்பட்ட அளவு 705 ஆகக் காணப்பட்டது. இருந்த போதிலும் அந்தக் காலப்பகுதியின் போது பதிவு செய்வதற்கு இலக்கிடப்பட்ட முகாமைத்துவ அதிகாரசபைகளின் எண்ணிக்கை 721 ஆக இருந்த போதிலும் 354 முகாமைத்துவ அதிகாரசபைகள் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 5 ஆம் பந்தியின் (எ) பிரிவு | கூட்டு ஆதன சொத்துக்களின் பொது வசதிகளைப் பராமரிப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் மாளிகாவத்தை மற்றும் ஐல்தர வீடமைப்புத் திட்டங்களில் பொது வசதிகளைக் கையளிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 2005 இன் 06 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (திருத்த) அதிகாரச்சட்டம் 11 ஆம் பிரிவு | ஒரு மாதம் முடிவடைந்ததன் பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் பெறுமதி சேர்வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குரிய ரூபா 208,027 தொகையான பெறுமதிசேர்வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 100,528 தொகை, நட்டங்களை அறவிடும் காலத்தை விஞ்சிய நிறுத்திவைத்தல் பணமான ரூபா 116,597 தொகை மற்றும் கேள்வி வைப்பு ரூபா 68,600 தொகை தொடர்பாக அதிகாரசபை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கோ அல்லது மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | 08 வாகனங்களுக்கு 06 மாதங்களுக்கு ஒரு தடவை செய்யப்பட வேண்டிய எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) | 2.8.4 ஆம் பந்தி | திணைக்களத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவர் வரிசை அமைச்சிலிருந்து அல்லது கொள்வனவு விடயங்களில் வெளி கொள்வனவு விடயங்கள் தொடர்பாக அறிவுடைய ஒருவராக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதிகாரசபையில் ரூபா 140 மில்லியன் தொகையான கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 64 தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவில் அவ்வாறான அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) 8.12.2 ஆம் பந்தி — பழுதுபார்த்தல் ஒப்பந்த வேலைகளுக்காக உடன் படிக்கை செய்யப்பட்ட ரூபா 5,378,154 தொகையான மொத்தத் தொகையும் உரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தும் அதற்குரிய வேலைப் பூர்த்திச் சான்றிதழ் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் பற்றாக்குறை ரூபா 8,961,997 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 16,005,452 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 24,967,449 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட ரூபா 120 மில்லியன் தொகையான வருமானத்தில் 48 சதவீதத்தை அடைந்து கொள்வதற்கு அதிகாரசபை முடியாதிருந்தமை மற்றும் அந்த மிகை மதிப்பீட்டின் காரணமாக செயற்பாட்டுச் செலவினத்திற்கான திறைசேரி நிதிஏற்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 74 சதவீதத்தினால் குறைந்திருந்தமை ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய நிதி விளைவு அசாதாரணமாக வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நலிவான செயற்பாட்டு செயலாற்றல் நிலைமையின் அடிப்படையில் முன்னைய ஆண்டைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் திறைசேரி பெறுவனவுகள் தவிர அதிகாரசபையின் தேறிய நட்டம் முறையே ரூபா 23 மில்லியன் மற்றும் ரூபா 19 மில்லியனாக இருந்தது.

(ஆ) ஏழுநாள் வைப்பு வட்டி வருமானம் மற்றும் செயற்பாடற்ற வருமான அதிகரிப்பின் காரணமாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக சேவைக்கட்டண வருமானம் மற்றும் செயற்பாடற்ற வருமானங்கள் முறையே 121 சதவீதத்தினாலும் 165 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

(இ) அதிகாரசபையின் பிரதான வருமான மூலமான கூட்டு ஆதன சான்றிதழ் விநியோகித்தல் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 22 மில்லியனால் அதாவது 52 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் நேர்ச் செலவினம் 249 சதவீத்தினாலும், செயற்பாடற்ற செலவினம் 139 சதவீதத்தினாலும், பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிச் செலவினம் என்பன அதிகரித்தமையின் காரணமாக ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 9 மில்லியன் நட்டமாகியிருந்தது.

(உ) அவ்வாறே அதிகாரசபையின் செயல்நடவடிக்கைகளில் இருந்து வருமானம் உழைக்கப்படாமை மற்றும் திறைசேரியின் நிதி ஏற்பாடு ரூபா 39 மில்லியன் தொடக்கம் ரூபா 10 மில்லியன் வரை 74 சதவீத்தினால் குறைவடைந்தமை இதற்குத் தாக்கமளித்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை விகிதம் 1:1.4 ஆனமையால் அதிகாரசபையின் தொழிற்படு மூலதனத் தேவை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(எ) ஈடுபடுத்திய மூலதனத்திற்கு ஈடாக மொத்த தேறிய சொத்துக்களில் 825 சதவீத வீழ்ச்சி அதிகாரசபையின் மூலதனக் குறைவிற்கு காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கூட்டு ஆதன சான்றிதழ் விநியோகித்தலின் பௌதீக செயல்முன்னேற்றம் 59 சதவீதமாக இருந்ததுடன் நிதிசார் செயல்முன்னேற்றம் 39 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ அதிகாரசபைகளை உருவாக்கும் நிதி செயல்முன்னேற்றம் 45 சதவீதமான இருந்தது. அரசாங்க பிரிவிற்குரிய வீட்டுத் திட்டங்களில் அமைக்கப்பட்ட மீளாய்வாண்டின் போது பதிவு செய்து புதுப்பிக்கப்பட்ட 45 முகாமைத்துவ அதிகார சபைகள், முகாமைத்துவ அதிகாரசபைகள் உருவாக்கப்பட்டதாக செயலாற்றலில் எடுக்கப்பட்டமையினால் பௌதீக செயல்முன்னேற்றம் 193 சதவீத உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) அரசாங்கத்தின் 12 மாடி வீட்டுத் திட்டங்களுக்கு ரூபா 178.7 மில்லியன் நிதியேற்பாட்டில் மீளமைப்புச் செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அதில் 02 செயற்திட்டங்களில் மாத்திரம் மீளமைப்புச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஈ) பரணயோன் வீதி வீடமைப்புத் திட்டம் மற்றும் சோண்டர்ஸ் பிரதேச வீடமைப்புத் திட்டம் என்பவற்றை மீளமைப்புச் செய்வதற்கு ரூபா 3.8 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அதற்காக எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சுனாமி பாதிப்பிற்குள்ளாகிய மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட கூட்டு ஆதன வீடமைப்புத்திட்டத்தின் கீழ் ரூபா 50 மில்லியன் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 34 உறுதிகளை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 2013 இன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் உறுதி வழங்குதலின் பௌதீக செயல்முன்னேற்றம் 21 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு உறுதியேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுமதிசேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் 04 காலாண்டிற்காக செலுத்தவேண்டிய பெறுமதி சேர்வரித் தொகை ரூபா 5,774,427 ஆக இருந்த போதிலும், ரூபா 7,199,727 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,425,300 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணிக்கொடை அறவீடுகள் ரூபா 22,181,496 ஆக இருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதி ரூபா 2,433,161 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 19,748,335 தொகையான பற்றாக்குறையை முதலீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அப்பணத்தை முதலீடு செய்வதற்கு போதியளவான காசு மீதி அதிகாரசபையிடம் காணப்படாமையினால் திரவத்தன்மை மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் தொடர்பாக பிரச்சினைக்குரியதாக இருந்தது.

### 4.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செயற்திட்டங்களின் அளவிடைப்பத்திரங்களின் பிரகாரம் நிறைவேற்றப்படாத 06 செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,839,596 தொகை பிழையாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முறையாக பட்டியல்களை உறுதிப்படுத்தாமலும் செய்தவேலைகளை உரிய முறையில் உறுதிப்படுத்தாமலும் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 4.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 410,000 கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திசாநாயக்க வத்த வீட்டுத் திட்டத்தை மீளமைக்கும் நடவடிக்கைகளில் மேலதிக வேலைகளுக்கான 04 பொறியியலாளர் மதிப்பீட்டு அளவீட்டுப் பத்திரங்களில் 2011 ஆம் ஆண்டின் கட்டிட கட்டணப் பட்டோலையில் (BSR) விலை வீதத்தை விஞ்சி கணிப்பிடப்பட்ட வேலை விடயங்களின் பெறுமதி ரூபா 534,150 ஆகும். அவ்வாறே இந்த ஒப்பந்தங்களின் 11 வேலை விடயங்களுக்காக பொறியியலாளர் மதிப்பீட்டில் சமர்ப்பிக்கப்பட்ட விலை வீதத்தில் 2011 ஆம் ஆண்டில் கட்டிடக் கட்டணப் பட்டோலையின் (BSR) விலை வீதம் இணங்கியிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையினால் கேள்வி கோரும் பொது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அளவிடைப் பத்திரத்தில் மேலதிக வேலைகளுக்கான 10 சதவீதம் குறிப்பிடப்பட்டு கேள்விதாரர் ஆவணங்களைச் சமர்ப்பித்தமையினால் ஒப்பந்தத்தின் முழுமையான பெறுமதி தொடர்பாக கேள்விதாருக்கு முன் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

(உ) பெறுமதியின் பிரகாரம் உயர் கொள்வனவுக் குழுவின் மூலம் மேற்கொள்ளும் தேவைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்டமையினால் ரூபா 139.76 மில்லியன் செலவில் மீளாய்வாண்டில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 12 வீடமைப்புத்திட்டங்களுக்குரிய ஒப்பந்த கொள்வனவுகளில் 12 கொள்வனவுகளின் கீழ் மேற்கொள்வதற்குப் பதிலாக 64 சிறிய கொள்வனவுகளின் கீழ் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் பழுதுபார்த்தலைச் செய்த ஒப்பந்தக்காரருக்காக ரூபா 21.90 மில்லியன் செலுத்த வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அப் பெறுமதி ரூபா 50.40 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இந்த மீளமைப்பு நடவடிக்கைகள் திறைசேரி நிதி ஏற்பாடுகள் கிடைக்கின்ற அளவின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட போதிலும் கொடுப்பனவுகள் தாமதமாகியமை ஒப்பந்தங்களின் செயலாற்றல் கீழ் நோக்கிச் செல்வதற்கு நேரடியாகத் தாக்கமளித்தது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 139 மற்றும் 108 இற்கிடையே இருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 07 ஆந் திகதிய 14/0014/517/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 29 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக அதிகாரசபையில் ஓய்வுபெற்றுச் சென்ற பொது முகாமையாளரின் சேவை ஒப்பந்த அடிப்படையில் மீள அமர்த்துவதற்கும் ஒரு வருட காலத்தில் அப்பதவிக்காக தகுதியான பதிலீட்டாளர் ஒருவருக்கு அவரின் மேற்பார்வையின் கீழ்

பயிற்சியளிப்பதற்கு அமைச்சுச் செயலாளர் அறிவித்திருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பதிலீட்டாளர் ஒருவர் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் பிரதி பொது முகாமையாளர் (செயற்பாட்டு) பதவி மற்றும் 08 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படுகின்றமை நிறுவனத்தின் செயலாற்றலுக்கு நேரடியாகத் தாக்கமளித்தது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

(இ) மேலும் வெற்றிடமான 17 இரண்டாம் நிலைப் பதவிக்காவும் 05 ஆரம்பநிலை பதவிகளுக்காகவும் பதவியணியினரை மீளாய்வாண்டின் போது நிரப்புவதற்கு போதியளவான முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்புப் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2012 - 2016 காலப்பகுதிக்குரியதாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2013 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 சனவரி 24 ஆந் திகதிய 86 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட 2012 - 2016 இன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டிய செயற்பாடற்ற முகாமைத்துவ அதிகாரசபைகளுக்காக நிருவாகிகளை நியமித்தல் மற்றும் வன்ஸ்டொப் சொப் (திட்டமிடலை அங்கீகரித்தல் வினைத்திறன் வேலை ஒழுங்குகள்) 2013 இன் செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயல்நடவடிக்கைகளில் நிறைவேற்ற வேண்டிய அளவு மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டின் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படாமையினால் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் 2013 சனவரி 24 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டின் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம்

- 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைள்
- பிரதான கொள்வனவுத் திட்டம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை நாளது வரையாக்குதல் மற்றும்
- விரிவான கொள்வனவுத் திட்டம் சமர்ப்பித்தல் தொடர்பாக கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பணிப்பாளர் சபையின் அமைப்பு**

2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்த) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நடவடிக்கைகளை முகாமை மற்றும் நிருவகிப்பதற்கான உத்தியோகபூர்வ அதிகாரம் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 06 அங்கத்தவர்களில் வீட்டு அடமானக் கடன் வழங்கும் சங்கத்தின் ஒரு பிரதிநிதி, தனியார் பிரிவின் அபிவிருத்தியாளர்களின் சங்கத்தின் ஒரு அங்கத்தவர், இலங்கை வணிக சபை மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவ துறையில் அனுபவமுள்ள ஒருவரின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் ஒரு அங்கத்தவராக 04 அங்கத்தவர்கள் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையின் முகாமைத்துவ சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்கள் பாதிடப்பட்ட தொகைகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 57.32 மில்லியன் மற்றும் ரூபா 18.52 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்